கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 58 இதழ் : 07 அக்டோபர் 2023 விலை ரூ.25/-



# உள்ளடக்கம்


**நாடகம்**

மு.இராமசுவாமி 27

**கட்டுரை**

கவிதைக்காரன் இளங்கோ 14

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் 45

**சிறுகதை**

செய்யாறு தி.தா.நாராயணன் 06

கவிஜி 22

சந்திரகிருஷ்ணன் 40

ஊத்தங்கால் ப.கோவிந்தராசு 50

வாசுதேவன் அருணாசலம் 60

**கவிதை**

க.சி.அம்பிகாவர்ஷினி 13

சூர்யமித்திரன் 21

கிரேஸ் பிரதிபா 26

கனகா பாலன் 39

சாய் வைஷ்ணவி 44

பாரியன்பன் நாகராஜன் 49

காரைக்குடி சாதிக் 69

**கடைசிப் பக்கம்**

இந்திரா பார்த்தசாரதி 70



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# நான் - வீழ்வே - னென்று - நினைத் - தாயோ!

மதுரையிலிருந்து உடுமலைக்குப் பேருந்தில் வந்துகொண்டிருந்த தன் துணைவி சண்முகசுந்தரிக்காக உடுமலை பேருந்து நிலையத்தில் காத்துக்கொண்டிருந்தார் ஐம்பது வயதைக் கடந்துகொண்டிருந்த அர்ச்சுனன். இரவு ஒன்பது மணி. பழனிக்கு வந்துவிட்டதாக அர்ச்சுனனுக்குத் தன்னுடைய கைபேசியிலிருந்து தகவல் கொடுத்திருந்தார் சண்முகசுந்தரி. இன்னும் சரியாக நாற்பது நிமிடங்களில் உடுமலைக்குப் பேருந்து வந்துவிடும் என்றும் கோவை செல்லும் பேருந்தில் பழனியில் ஏறியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். உடுமலை பேருந்து நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் சொந்த கிராமமான மலையாண்டிப்பட்டணம் செல்ல அந்த நேரத்தில் பேருந்து கிடையாது என்பதால் பேருந்து நிலையத்திற்கு வெளியே தன்னுடைய வாகனத்தை நிறுத்திவிட்டு பயணிகளுக்கான நீண்ட நிழற்குடையில் தன் துணைவிக்காகக் காத்திருந்தார் அர்ச்சுனன். பொள்ளாச்சி கோவை ஆகிய நகரங்களுக்குச் செல்லும் பேருந்துகள் அந்த நிழற்குடையின் அருகில் நின்று பயணிகளை இறக்கிவிட்டும் ஏற்றியும் சென்று கொண்டிருந்தன. மிகவும் வழக்கமான ஒரு பேருந்து நிலையச் சூழல்தான்.

அங்கிருந்த நீண்ட நிழற்குடைக்குமுன் ஒரு வேர்க்கடலை தள்ளுவண்டி நான்கு பெரிய சைக்கிள் சக்கரங்களின் மேல் தடுப்பு எதுவும் இல்லாத அகன்ற தட்டையான சிறிய மேடை போன்ற அமைப்போடு நின்றுகொண்டிருந்தது. அதனுடைய மையப்பகுதியில் இரண்டாக மடித்து விரித்துப் போடப்பட்டிருந்த சாக்கின் நடுவில் பச்சை வேர்க்கடலை சமமாகப் பரப்பிவிடப்பட்டிருந்தது. நடுவில் சிறிய ஆழமில்லாப் பள்ளம். சாக்கிற்கருகில் இரண்டு செங்கற்கள். அதற்கிடையில் ஒரு சிலேட்டுப் பலகை செருகிவைக்கப்பட்டிருந்தது. அதில் ‘பொட்டலம் – ரூ.10’ என்ற வாசகம். ஏற்கனவே வறுத்து சுமார் பத்துப் பதினைந்து பொட்டலங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக செங்கற்களுக்கு இடது ஓரத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. இன்னும் சில பொட்டலங்கள் தனியாக, செங்கற்களுக்கு வலது ஓரத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அதனருகே ஒரு சிறிய ஸீல்டு பேட்டரியோடு இணைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய பெட்டி போன்ற எல்ஈடி பல்ப் மங்கலான

வெளிச்சத்தை வேண்டா வெறுப்பாகக் கொட்டிக்கொண்டிருந்தது. மூடி போட்ட சிறிய தகர டப்பா, தனித்து வண்டியின் விளிம்பு ஓரத்தில் கிடந்தது. வண்டி மேடையின் வலது ஓரத்தில் மூன்று பக்கமும் புகைபிடித்துக் கருத்துப்போயிருந்த தகரத்தால் சூழப்பட்டு எரிந்துகொண்டிருந்த ஒரு கேஸ் அடுப்பு. சிறிய கேஸ் சிலிண்டர் வண்டியின் கீழ் தட்டில். அதனருகே இரண்டு பெரிய தகரப் பெட்டிகள். ஒரு பெட்டியின் மேல் சிறிய இரும்புச் சல்லடை, கவிழ்த்தி வைக்கப்பட்டிருந்தது. அடுப்பின் மேல் மூன்று லிட்டர் தண்ணீர் கொள்ளும் அளவில் ஓர் இரும்பு வாணலி. அதில் கருத்துப்போன மணலுடன் பச்சை வேர்க்கடலை வறுபட்டுக்கொண்டிருந்தது. ஒரே சீராகக் கையிலிருந்து இரண்டடி நீளமுள்ள சிறிய தட்டையான தலைகொண்ட இரும்புக் கரண்டியால் மேலும் கீழுமாக, இடமும் வலமுமாக மணலோடு வேர்க்கடலையைத் தள்ளித்தள்ளி வறுத்துக் கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். சுமார் அறுபதிலிருந்து அறுபத்தைந்து வயதிருக்கும். வலது கையில் கைக்கடிகாரம். மடித்துக் கட்டிய கட்டம்போட்ட லுங்கி. வெள்ளைச் சட்டை. சட்டையின் கழுத்துப்பட்டையின் மீது மடித்து அழகாக படிய வைக்கப்பட்டிருந்த பொடிக்கட்டம் போட்டக் கைக்குட்டை.

ஒவ்வொரு பேருந்தும் அங்கு வந்து நின்று பயணிகளை இறக்கிவிடும்போது மட்டும் உரத்த குரலில் 'வேர்க்கடல! வேர்க்கடல!... வறுத்த வேர்க்கடல!' என்று பயணிகளின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருந்தார். அவ்வப்போது இரும்பு சட்டியின் விளிம்பில் தன் கையிலிருக்கும் கரண்டியால் தட்டித்தட்டி ஒலி எழுப்பிக்கொண்டிருந்தார். அந்த ஒலியால் ஏறக்குறைய அருகிலிருக்கும் அனைவரும் அதிர்ந்து கவரப்பட்டாலும், வேர்க்கடலை வாங்குபவர்கள் ஒரு சிலரே. சில பயணிகள் பேருந்திலிருந்து இறங்கி சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு வேர்க்கடலை வாங்கி தின்றுக்கொண்டே அங்கிருந்து கிளம்பினர். சில பயணிகள் அங்கு இறங்கி வேர்க்கடலை வாங்குவதற்கு வந்தவர்கள்போல், இறங்கும்போதே சட்டைப்பையிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு இறங்கினார்கள். நேராக அந்தப் பெரியவரிடம் தந்து இரண்டு அல்லது மூன்று பொட்டலங்களை வாங்கிச் சென்றுகொண்டிருந்தனர். வறுத்துச் சலித்த கடலையை வண்டியின் அடித்தட்டிலிருக்கும் தகரப்பெட்டிக்குள் அவ்வப்போது நிரப்பிக்கொண்டிருந்தார்.

வேர்க்கடலை வண்டியிலிருந்து சுமார் பத்தடி தூரத்தில் அர்ச்சுனன் நின்றிருந்தார். துணைவிக்காகக் காத்திருந்த நேரத்தில் நிழற்குடையின் கீழ் அமர்ந்திருந்த பயணிகள் அனைவரையும் நோட்டமிட்டவண்ணமிருந்தார். பேருந்து நிலையத்திற்குள் நுழையும் ஒவ்வொரு பேருந்திற்கும் பயணிகள் இருந்தார்கள். ஆனால், ஒரேயொரு வயதான பெண் மட்டும் 'எந்த பஸ்ஸூ எங்க போனா எனக்கென்ன' என்பதுபோல் நிழற்குடையின் ஓரத்தில் தரையில் அமர்ந்திருந்தார். பை ஏதும் அருகில் இல்லை. கையிலும் ஒன்றுமில்லை. ஆனால் முகம் மட்டும் கவலையைத் தாங்கிக்கொண்டிருந்தது. 'யாரையாவது அழைத்துச் செல்ல காத்திருக்கிறார்' என்றாலும் இறங்கும் பயணிகளையாவது கவனிக்க வேண்டுமே! அதுவுமில்லை. ஏன்? என்ற ஒரு கேள்வியை மட்டும் மனதின் ஓர் ஓரத்தில் போட்டுவிட்டு மற்ற பயணிகளைக் கவனிப்பதைத் தொடர்ந்தார் அர்ச்சுனன். திடீரென்று ஓர் இரு சக்கர வாகனம் பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. பேருந்துகளைத் தவிர வேற எந்த வாகனமும் உள்ளே வரக்கூடாது என்ற எச்சரிக்கைப் பலகை ஆங்காங்கே

இருக்கத்தான் செய்தது. வேர்க்கடலை வண்டிக்கு அருகில் வந்து நின்றது அந்த இரு சக்கர வாகனம். வாகனத்தில் மூன்று இளைஞர்கள். மூன்று வேர்க்கடலைப் பொட்டலங்களை வாங்கிக்கொண்டு பேருந்து நிலையத்தைவிட்டு வெளியே விரைந்தனர். வண்டியின் வேகம் சற்று அதிகமாகவே இருந்தது.

அரச்சுனனின் கைபேசி அலறியது. 'மடத்துக்குளம் வந்துட்டேனுங்க! இன்னும் பத்து நிமிஷத்தில அங்க வந்திடுவேன்' என்றாள் சண்முகசுந்தரி. 'சரிம்மா! வா! இங்கதான் பஸ்ட்டாண்டில வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன்' என்று கூறி கைபேசியின் இணைப்பைத் துண்டித்தார். அப்போது ஒரு பேருந்து வந்து அங்கே நின்றது. ஆறு பயணிகள் இறங்கினர் அதில் இருவர் வேர்க்கடலை வண்டியை நோக்கி வந்தனர். ஆளுக்கொரு பொட்டலம் தனித்தனியாக வாங்கிச் சென்றனர். அதைக் கவனித்துக் கொண்டிருந்த அர்ச்சுனன் சட்டென்று அந்த வித்தியாசத்தை உணர்ந்தார். அந்தப் பெரியவர் ஒருவருக்கு செங்கற்களுக்கு இடதுபுறமிருந்த பொட்டலக் குவியலிலிருந்தும் மற்றொருவருக்கு வலதுபுறமிருந்த பொட்டலக் குவியலிலிருந்தும் பொட்டலங்களை எடுத்துக் கொடுத்திருந்தார். ஏன்? என்று ஒருவினாடி குழம்பிப்போனார் அர்ச்சுனன். தான் உணர்ந்த அந்த வித்தியாசம் எதுவும், தன் மனம் தேவையில்லாமல் ஏற்படுத்திய ஒன்றா? என்ற கேள்வி அவர் மனதில் தோன்றாமலிலில்லை. அடுத்து உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று முடிவு செய்து காத்திருந்தார். அடுத்து ஒரு பேருந்து வந்து நின்றது. பயணிகள் இறங்கினர். 'அம்மா! வறுத்த வேர்க்கடலை! ப்ளீஸ்ம்மா!' என்று கெஞ்சிச் சிணுங்கிய தன் மகனுக்கு ஒரு பொட்டலம் வாங்க ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினார் ஒரு பெண். நீட்டிய ரூபாயை வாங்கி, தகர டப்பாவைத் திறந்து அதில் போட்டுவிட்டு, செங்கற்களுக்கு இடதுபுறமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொட்டலங்களிலிருந்து ஒன்றை எடுத்து நீட்டினார். அந்தப் பெண் அதை வாங்கித் தன் மகனிடம் கொடுக்க, இருவரும் அங்கிருந்து கிளம்பினர். அவர்களைத் தொடர்ந்து இளைஞன் ஒருவன் வந்தான். மஷ்ரூம் ஸ்டைலில் தலைமுடி. காதுகளின் ஓரங்களில் அடர்த்தி குறைவாகவும் தாடைப்பகுதிகளில் அடர்த்தி அதிகமாகவும் தாடி வைத்திருந்தான். "நான் / வீழ்வே / னென்று / நினைத் / தாயோ" என்ற வார்த்தைகள் சதுரம் சதுரமாக, பிரித்துப் பிரித்து ஐந்து வரிகளாக, முன்னும் பின்னுமாக, அங்கொன்றுமாய் இங்கொன்றுமாய், எழுதப்பட்டிருந்த, கழுத்துப் பட்டையில்லாத பனியன் அணிந்திருந்தான். மிகவும் மெலிந்த கால்களின் கணுக்கால்கள் தெரியும்படி இறுக்கமாக, எந்த நேரம் அவிழ்ந்து கீழே நழுவிவிடுமோ என்றபடி அணிந்திருந்த தன்னுடைய பேண்டின் பின்பாக்கெட்டிலிருந்து இரண்டு இருநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துச் சுருட்டி கைக்குள் அடக்கி, அந்தப் பெரியவரிடம் நீட்டினான். அதை வாங்கி சாக்கைத் தூக்கி அடியில் எறிந்தார் பெரியவர். செங்கற்களுக்கு வலதுபுறமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொட்டலங்களிலிருந்து ஒன்றை எடுத்து அந்த இளைஞனிடம் கொடுத்தார். அந்த இளைஞன் வாங்கி, தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் அவசரமாகத் திணித்துக்கொண்டு அங்கிருந்து மறைந்தான். அர்ச்சுனன் அதிர்ந்து போனார். தான் உணர்ந்த வித்தியாசம் உண்மைதான் என்றும் புரிந்துகொண்டார். இருந்தாலும் உறுதிப்படுத்த இன்னும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்.

பேருந்து ஒன்று உள்ளே நுழைந்தது.

பயணிகள் இறங்கினார்கள். பேருந்து கிளம்பிச் சென்றுவிட்டது. யார் யார் வேர்க்கடலை வண்டிக்கு வருகிறார்கள், யார் யாருக்கு எந்தப் பொட்டலக் குவியல்களிலிருந்து பொட்டலங்கள் போய்ச்சேருகின்றன என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார். 'ஏங்க! வேர்க்கடலை வாங்கட்டுங்களா?' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார். சுண்முகசுந்தரி. 'ஓ! வந்திட்டியா!' இப்பப் போன பஸ்ஸுலதான் வந்தியா? கவனிக்காம விட்டுட்டேன். வாந்தி ஒண்ணும் எடுக்கலையே! மாத்திர போட்டுட்டுதான் ஏறினாயா?' என்றார் அர்ச்சுனன். 'ஒண்ணும் பிரச்சன இல்லீங்க. பழனிவரைக்கும் நல்லா தூங்கிட்டேன். ஏங்க? கடல வண்டியவே பாத்துக்கிட்டிருக்கீங்க? கடல எதும் வாங்கட்டா?' என்றாள் சண்முகசுந்தரி. 'அதெல்லாம் ஒண்ணும் வேணாம். வா, போவோம். வண்டிய வெளியில ஈஸ்வரி ஸ்டோருக்கு முன்னாடிதான் நிப்பாட்டிருக்கேன்' என்று தன் துணைவியிடம் கூறி அங்கிருந்து நகர்ந்து ஒரு பத்தடி சென்றிருப்பார். ஜீப் ஒன்று பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. டிஎன் 78 ஜி 4283 அதன் மேல் நீள்சதுர வண்ண சைரன் கருவி பொருத்தப்பட்டிருந்தது. விட்டுவிட்டு கண்களைப் பிடுங்குவதுபோல் ஒளியை வீசிக்கொண்டிருந்தது. ஆனால் சைரன் ஒலிக்கவில்லை. வேர்க்கடலை வண்டியின் அருகில் நின்றது. ஜீப்பின் பக்கப் பின்கதவுகள் இரண்டும் சட்டென்று திறந்தன. உள்ளிருந்து இரண்டு இளம் காவலர்கள் இறங்கினர். வேர்க்கடலை வண்டியின் பெரியவர் அருகே சென்றார்கள். பெரியவர் ஒன்றும் பேசவில்லை. சட்டையின் பட்டைமீது படியவைத்திருந்த தன்னுடைய கைக்குட்டையை எடுத்து உதறினார். பின் முகத்தை மெதுவாகத் துடைத்துகொண்டு அவர்களோடு ஜீப்பில் ஏறினார். ஜீப் விரைந்து பேருந்து நிலையத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தது. உள்ளே இருந்து ஜீப்பின் பின்புறக் கண்ணாடிவழியே பெரியவர் அவருடைய வேர்க்கடலை வண்டியைப் பார்த்துக்கொண்டிருக்க ஜீப் மறைந்தது.

'வேர்க்கடல! வேர்க்கடல! வறுத்த வேர்க்கடல!' என்ற சத்தம் சட்டியில் கரண்டி தட்டும் ஓசையோடு வந்ததைக் கேட்டு அர்ச்சுனன் திடுக்கிட்டு வேர்க்கடலை வண்டிப்பக்கம் திரும்பிப்பார்த்தார். பேருந்து நிலையத்தைவிட்டு வெளியேற, 'எந்த பஸ்ஸு எங்க போனா எனக்கென்ன' என்று நிழற்குடையில் அமர்ந்திருந்த அதே பெண் வேர்க்கடலை வண்டியை மெதுவாகத் தள்ளிக்கொண்டு வந்தார். சற்று வெளிச்சமில்லா பகுதியில் நின்றுகொண்டிருந்த அர்ச்சுனனையும் சண்முகசுந்தரியையும் கடந்துகொண்டிருந்தார். 'பொளைக்கவிட மாட்டானுக!' என்று தழுதழுத்தக் குரலில் கண்ணீர் வழிந்தோடிய கன்னங்களைத் துடைத்துக்கொண்டே வந்த அந்தப் பெண்ணின் வார்த்தைகள் அர்ச்சுனனுக்குக் கேட்காமலில்லை.

★ ★ ★ ★ ★

"சதீஸ்ஸு! ஏப்பா சதீஸ்ஸு!" என்று அறையிலிருந்தபடியே உரக்க அழைத்தார் காவல் ஆய்வாளர் அன்பரசு. "சார், இந்தா வந்துட்டேனுங்க!" என்றபடி சதீஷ் அறைக்குள்ளே நுழைந்தான். "யாருயா, இவன்? நம்மள கதையில எழுதி வைச்சிருக்கான். இவனுங்க கதைக்கு நாமதான் கிடைச்சோமா. இவனுங்க இஷ்டத்துக்கு என்னத்தையாவது எழுதிவச்சிட்டு, நம்ம உசிர எடுக்குறானுங்க. எப்படியா இதப் புடிச்ச?" என்று சீறினார் அன்பரசு. "சார், நம்ம ஜோசப்போட ஃப்ரண்டுதான் இன்னிக்கு கூப்பிட்டு சொல்லியிருக்கானுங்க. வாட்ஸ்அப்பில

கதைய அனுப்பி வெச்சிருக்கானுங்க. நானும் படிச்சிட்டேனுங்க. ஒரே காண்டாயிருச்சு'' என்று பதில் சொன்னான் சதீஷ். ''அட்ரஸ பிடியா. கூப்பிட்டு ஒரு வாங்கு வாங்கிவிட்டாதான் சரியா வருவானுங்க. கதை எழுதுரேனுங்கற பேருல நம்ம தலைய போட்டு உருட்டுறானுங்க. நம்ம வண்டி நம்பர்ல ஒரே ஒரு நம்பர மட்டும்தான் மாத்தி வெச்சிருக்கிறான். ங்கொய்யால. அப்படியே, பக்கத்துல இருந்து பாத்த மாதிரில எளுதியிருக்கான்..... ஏன் சதீஸு, அப்படி எதும் அங்க நடக்குதா என்ன?'' என்று சந்தேகத்தை எழுப்பினார் அன்பரசு. ''சார், அப்படியிருந்தா நம்ம பசங்க இன்ஃபர்மேசன் கொடுத்திருப்பானுங்க. அந்த ஆளு எதையோ கற்பனலெ அள்ளி விட்டுருக்கானுங்க, சார்'' என்ற சதீஷின் பதில் அன்பரசுக்கு போதுமானதாக இல்லை. ''ஏப்பா, நாம ஏதும் கவனிக்காமா விட்டுப்புட்டோமா? எஸ்.பி. கண்ணுல இந்தக் கத சிக்குச்சுன்னு வெய்யி, சிக்கிக்கிட்டு சீட்டியடிக்க வேண்டியதுதான்பா! பெரிசா ஒண்ணுமில்லேன்னாலும், நாம பதில் சொல்லுறமாதிரி வந்திடும் சதீஸ்ஸூ. கொஞ்சம் சூதானமா இருக்கணும்பா'' என்று இரைந்தார் அன்பரசு. ''சார், நம்ம எஸ்.பிக்குத் தமிழ் படிக்க வராதுங்க. இதெல்லாமா போயி சீரியஸ்ஸா எடுத்துக்கப்போறாங்க? வேற வேலை ஆயிரமிருக்குங்க, சார். அப்புறம் இது வெறும் டுபாக்கூர் கதங்க. எழுதினவன் யாரு என்னானு விசாரிச்சு ஒரு வார்னிங் கொடுங்க, சார். போதும்'' என்று பதிலளித்தான் சதீஷ். ''அதுக்கு முன்னாடி வேர்க்கடல வண்டி அங்க இருக்கா? அந்த ஆள் சொல்லுறாப்புல, ஏதாவது ட்ரக் டீலிங் இருக்கான்னு செக் பண்ணிக்கிறது நல்லதுப்பா. ஏதோ ரெண்டுவக பொட்டலங்கிறான்'' என்றார் அன்பரசு. ''நீங்க சொல்லுறதும் சரிதானுங்க, சார். செக் பண்ணிட்டு அப்புறமா அந்தக் கதாசிரியரைப் பிடிச்சு உதைப்போம், சார். இன்னிக்கு ஈவ்னிங்க்கு நான் மப்டீயில போயி செக் பண்ணிடுறேன் சார்'' என்று உறுதியளித்தான் சதீஷ். ''ஜோசப்ப எதுக்கும் கூப்பிட்டுக்கிறியா?'' என்றார் அன்பரசு. ''வேணாம், சார். நானே பாத்திடுவேன்'' என்று சிறிய முறுவலுடன் முடித்தான் சதீஷ்.

அன்று இரவே சரியாக ஏழு மணிக்கு உடுமலை பேருந்துநிலையத்திற்கு சதீஷ் சென்றான். கையில் ஒரு மஞ்சள் பை. வெள்ளை வேஷ்டி. கோடுபோட்ட சட்டை. நெற்றியில் ஒற்றைப்பட்டை. பொள்ளாச்சி கோவை பேருந்துகள் நிற்கும் நிழற்குடைக்குச் சென்றான். அங்கே வேர்க்கடலை வண்டி இல்லை. காத்திருந்தான். வேர்க்கடலை வண்டியின் வாசனையோ சுவடோ சத்தமோ எதுவுமேயில்லை. முகமே தெரியாத அந்தக் கதாசிரியரின் மீது சதீஷிற்குக் கோபம் அளவில்லாமல் கிளம்பியது. காவல் ஆய்வாளர் அன்பரசைக் கைபேசியில் அழைத்தான். அன்பரசு யாருடனோ பேசிக்கொண்டிருந்ததால், இணைப்பைத் துண்டித்துவிட்டு அங்கிருந்து கிளம்ப முயன்றான். ''வேர்க்கடல! வேர்க்கடல! . . . வறுத்த வேர்க்கடல'' என்ற உரத்த குரல் கேட்டுத் திடுக்கிட்டு, குரல்வந்த திசைநோக்கித் திரும்பினான். கதையில் விவரிக்கப்பட்ட அதே பெரியவர் நிழற்குடையை நெருங்கிக்கொண்டிருந்தார். லுங்கி வலது கையில் வாட்ச் சட்டையின் கழுத்துப்பட்டையில் பொடிக்கட்டம் போட்ட கைக்குட்டை. ஏதோ தான் கண்ட கனவு நனவாகிக் கொண்டிருப்பதைப்போல் உணர்ந்து உறைந்து போனான் சதீஷ். கண்ணெடுக்காமல் அந்தப் பெரியவரையே பார்த்துக்கொண்டே, சுயநினைவை இழந்தவன்போல் நின்றுகொண்டிருந்தான். கைபேசிக்கு அன்பரசிடமிருந்து வந்த

அழைப்பு அவனை உலுக்கியது. பதற்றத்துடன் கைபேசியை எடுத்து கொஞ்ச நேரம் கழித்து அவனே அழைப்பதாகச் சொல்லி அழைப்பைத் துண்டித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். கதையில் வந்த அதே ('எந்த பஸ்ஸூ எங்க போனா எனக்கென்ன') வயதான பெண் ஒருத்தி அங்கே நிழற்குடையில் அமர்ந்திருந்தார். 'அவர் எப்போது அங்கே வந்தார்' என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டோமோ என்று தன்னை நொந்துகொண்டான். ஒரு பேருந்து உள்ளே நுழைந்தது. அதிலிருந்து பயணிகள் சிலர் இறங்கினார்கள். நிழற்குடையில் காத்திருந்த பயணிகள் சிலர் அந்தப் பேருந்தில் ஏறினர். பேருந்து மெல்ல நகர்ந்து பேருந்து நிலையத்தைவிட்டு வெளியேறியது. இறங்கிய இரண்டு பயணிகள் வேர்க்கடலை வண்டிக்குச் சென்றனர். வேர்க்கடலைப் பொட்டலங்களை வாங்கி அங்கேயே அவிழ்த்து தின்றுகொண்டே வெளியேறினர். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சதிஷ் 'களத்தில் இறங்கிவிட வேண்டியதுதான்' என்று தனக்குள் கூறிக்கொண்டு வேர்க்கடலை வண்டியை நோக்கிச் சென்றான். சட்டைப்பையிலிருந்து ஓர் ஐந்நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான். கடலையை வறுத்துக்கொண்டிருந்த பெரியவர் ரூபாய் நோட்டை சில வினாடிகள் பார்த்துவிட்டுத் தலையை நிமிர்த்தினார். மீண்டும் சில வினாடிகள் மௌனம்."சில்லற பத்து ரூபா இருந்தா கொடுங்க தம்பி. ஏங்கிட்ட சில்லற இல்லீங்க. இப்பத்தான் வர்றேன்" என்றார். சட்டைப்பையிலிருந்து மொத்தமாக இருந்த ரூபாய் நோட்டுகளையும் சிறுசிறு காகித்துண்டுகளையும் எடுத்து அதில் தனியாக மடங்கி ஒளிந்திருந்த ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து, பெரியவரிடம் நீட்டினான் சதீஷ். அதை வாங்கி அங்கிருந்த, கதையில் வர்ணிக்கப்பட்டிருந்த, மூடிபோட்ட சிறிய தகர டப்பாவில் போட்டுவிட்டுச் செங்கற்களுக்கு இடதுபுறமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொட்டலங்களில் ஒன்றை எடுத்து சதீஷிடம் நீட்டினார் அந்தப் பெரியவர். அதை வாங்காமல் செங்கற்களுக்கு வலதுபுறமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொட்டலங்களிலிருந்து ஒன்று தரமுடியுமா என்று கேட்டான். பெரியவர் சட்டென்று கையிலிருந்த பொட்டலத்தை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு செங்கற்களுக்கு வலதுபுறமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொட்டலங்களிலிருந்து ஒன்றை எடுத்து நீட்டினார். அந்தத் தருணம் 'அனைத்தும் முடிந்துவிட்டது. பிரச்சனையில்லை' என்பது போன்ற எண்ணம் சதீஷின் மனதில் உதித்தது. புன்முறுவலுடன் பெரியவர் நீட்டிய பொட்டலத்தை வாங்கிக்கொண்டு அவரிடம் கேட்டான் "ஏன் இரண்டா பிரிச்சு வைச்சிருக்கீங்க?" "இதுல உப்புமட்டும், அதுல கொஞ்சம் காரம் சேர்த்திருக்கும்" என்றார் பெரியவர். "வயித்துல பால வார்த்தீங்க" என்ற வார்த்தைகள் எங்கோ யாரோ கூற, காதில் கேட்பதுபோலத் தோன்றியது சதீஷிற்கு. "எவ்வளவு நேரம் இங்க இருப்பீங்க?" என்று தொடர்ந்தான் சதீஷ். "ஒம்போது பத்துவரைக்கும் இருப்பேனுங்க" என்று பதிலளித்தார். "அந்த அம்மா யாருங்க?" என்று அங்கே 'எந்த பஸ்ஸூ எங்க போனா எனக்கென்ன' என்று அமர்ந்திருந்த பெண்ணை, கையை நீட்டிக்காண்பிக்காமல், முகத்தாலேயே சுட்டிக்காண்பித்துக் கேட்டான் சதீஷ். பெரியவர் அந்த அம்மாவைத் திரும்பிப் பார்த்துவிட்டு, "யாருனு தெரியலீங்க" என்றார் பெரியவர். சில வினாடிகளின் மௌனத்திற்குப்பின் சதீஷிடம் கேட்டார் "சார், நீங்க... போலீஸுங்களா?" சதீஷிற்குத் தூக்கிவாரிப்போட்டது.

இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, சட்டென்று தனது தொனியை மாற்றிக்கொண்டு பேசினான்.“இங்க உள்ளேலாம் வரக்கூடாதுங்க. பஸ் ஸ்டாண்டுக்கு வெளியதான் விக்கணுங்க. அப்படியே வந்தீங்கன்னாலும் ரொம்ப நேரம் இங்க இருக்கக்கூடாதுங்க. புரியுதுங்களா? எங்க ஆட்கள் யாராவது வந்தா தூக்கி கவுத்திவிட்டு போயிடுவாங்க”. பெரியவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. “சரிங்க, சார்” என்று கொஞ்சம் பவ்யமான குரலில் சொன்னார். “நாளைக்கு ஒரு பத்துமணிவாக்குல ஸ்டேசனுக்கு வந்து இன்ஸ்பெக்டர மட்டும் பாத்து கொஞ்சம் சொல்லிட்டுப் போங்க. பஸ் ஸ்டாண்டுக்குள்ள வந்து கொஞ்ச நேரம் வித்துட்டுப் போறதுக்கு அனுமதி தாங்கன்னு கேளுங்க. ஒண்ணும் சொல்ல மாட்டாரு. சரினுதான் சொல்லுவாரு. புரியுதுங்களா? நாளைக்கு மறந்திடாமா வாங்க” என்றான் சதீஷ். “சரிங்க, சார்” என்றார் அந்தப் பெரியவர் சற்று தயக்கத்துடன். சதீஷ் அந்தப் பெரியவரின் விலாசம் கைபேசி எண் அனைத்து விவரங்களையும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான். தன் கைபேசியிலேயே நடந்த அனைத்தையும் காவல் ஆய்வாளர் அன்பரசிடம் விவரித்தான். “நாளைக்கு ஸ்டேசனுக்கு வரச் சொல்லியிருக்கேலே? பாத்துக்குவோம். வா! வரும்போது அந்த கத வந்திருந்த மேகஸீனையும் பஸ்டாண்டு கடையிலேயே வாங்கிட்டு வந்திடு” என்றார் அன்பரசு.

தன்னுடைய கைபேசியின் திரையில் எதையோ பார்த்துக்கொண்டிருந்த அன்பரசிடம் “சார், அவரு வந்திருக்காருங்க” என்றான் சதீஷ். தலையைத் தூக்கி “யாரு, சதீஷா?” என்றார் அன்பரசு. புருவங்கள் நெருங்கி சுருங்கின. “சார், நம்ம கதாசிரியர்” என்றான் சதீஷ் நக்கலாக. “கைபேசியைச் சட்டென்று தன்முன்னிருந்த மேஜையின்மீது வைத்துவிட்டு “கூப்பிடுயா உள்ள அந்த ஆள” என்று அதிர்ந்தார் அன்பரசு. சில வினாடிகளில் கறுப்புநிற விளிம்புகொண்ட கண்ணாடி அணிந்த முதியவர் ஒருவர் அன்பரசின் முன்வந்து நின்றார். குறைந்தது மூன்று நான்கு நாட்களாக அவர் சவரம் செய்யவில்லை என்பதை அவர் முகம் தெரிவித்தது. தலையின் உச்சிப் பொட்டலைச் சுற்றி அரைவட்டமாக பின்மண்டை முழுவதும் நீண்ட வெள்ளை நுரையாக முடி. கண்களுக்குக் கீழே நுண்ணிய கரும்புள்ளிக் கூட்டங்கள் பழைய இரண்டு ரூபாய் நாணயமளவிற்கு. உதட்டின் ஓரத்தில் வெள்ளைப் புள்ளிகள் உடலெங்கும் பரவுவதற்குக் காத்து, ஒட்டிக்கொண்டிருந்தன. அவரைப் பின்தொடர்ந்துவந்த சதீஷ் “இவருதான், சார்” என்று அந்தக் கதாசிரியரைத் தாண்டி அறைக்குள் சென்றான். “உட்காருங்க!” என்றார் அன்பரசு. அவருடைய அந்த ஒரு வார்த்தையில் ‘காவல் துறை உங்கள் நண்பன்’ என்ற மந்திர தந்திரமெல்லாம் இங்கே கிடையாது என்பதை அந்தக் கதாசிரியருக்கு உடனே தெளிவுபடுத்திவிட்டது. மெதுவாக அங்கேயிருந்த ஒரு ஸ்டூலில் அமர்ந்தார். “நீங்கதான் அந்தக் கதைய எழுதினீங்களா?” என்றார் அன்பரசு. முதலிலிருந்த வேகம் கொஞ்சம் குறைந்ததாகவே அந்தக் கதாசிரியருக்குத் தோன்றியது.“எந்தக் கதைங்க, சார்?” என்றார் கதாசிரியர். குரலில் வயதின் நடுக்கம் தெரிந்ததே அன்றி, பயமோ பதற்றமோ அவரிடமில்லை. தன்னுடைய மேஜையின் வலது மேல் ட்ராயரைத் திறந்து உள்ளிருந்து சில தாள்களுக்கு அடியிலிருந்த, வெளிப்புறமாக விரித்து மடித்து வைத்திருந்த ஒரு இதழை எடுத்து மேஜையின் மீது கையை சற்று உயரத் தூக்கி, எறிவதுபோல் போட்டார்

அன்பரசு. இதழைப் பார்த்தவுடன் கதாசிரியருக்கு அந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்த கதை ஞாபகம் வந்தது. “வேர்க்கடல! வேர்க்கடல!.... வறுத்த வேர்க்கடல”.

அன்பரசு ஆரம்பித்தார். “ஏன் சார்! கதாசிரியருன்னா என்ன வேணும்னாலும் எழுதுவீங்களா? யதார்த்தம் வேணும்னு எங்கள இழுப்பீங்களா? விட்டா ஸ்டேசனுக்கு வந்து என் பேரு என்ன, இந்தா இவரு பேரு என்னா, இன்னும் யாரெல்லாம் இங்க இருக்கோமுன்னு கேட்டு போட்டுருப்பீங்கபோல! அது என்ன சார், ஜீப் நம்பர்ல ஒண்ண மட்டும் மாத்தி அப்படியே போட்டிருக்கீங்க! பாவங்க அந்த வேர்க்கடல விக்கிற பெரியவரு. அவுங்க வயித்துப் பொளப்புக்கு எதையோ செஞ்சு வித்து பொளச்சிக்கிட்டிருக்காங்க. இந்தக் கதய படிக்கிறவன், இனி வேர்க்கடல வண்டியப்பாத்தா தப்பான எண்ணம்தான் அவன் மனசுல தோணும். ஒங்க கத நல்லா இருக்கணும்னு நடக்காதத நடந்ததா, தப்புத் தப்பா, சொல்லுவீங்களா? கதைக்கு டுவிஸ்ட்டு வேணும்னு மொண்ணையா ஏதாவது சொல்லுவீங்களா? இந்த மலிவான அதிர்ச்சி வைத்தியத்தை வாசகனுக்கு இன்னும் எத்தன காலமா செய்யபோறீங்கனுதான் எனக்குத் தெரியல.... அது என்ன சார், அப்படி ஒரு டிஸ்கிரிப்ஸன். வாசகனை நம்ப வைக்க டிஸ்கிரிப்ஸன் தேவைதான்... கொஞ்சம் மாத்திகீத்தி போட்டு சொல்லுவீங்களா... அப்படியே அந்தப் பெரியவர வார்த்தேல வரஞ்சு வைச்சிருங்கீங்க... சதீஷ் அந்தப் பெரியவரப் பார்த்துட்டு அசந்துபோயிட்டான். உசிரோடு இருக்கிற மனுசங்கள, கொன்னு உயிரில்லாத கேரக்டர்கள உருவாக்காதீங்க. புரியுதுங்களா? விவரணையா எழுதத் தெரிஞ்சிருச்சுனா என்ன வேணும்னாலும் எழுதளாங்களா? எங்களுக்கும் நல்லா விவரணையா எழுதத் தெரியும். பாக்கிறீங்களா? சதீஸூ! நேத்து போட்ட வாளவாடி கொலகேசு எஃப்ஐஆரை எடுத்துட்டுவா! எடுத்துட்டு வந்து இவர்ட்ட காட்டு! நாம நல்லா வர்ணிச்சு விவரணையா எழுதுறோமா?... இல்ல இவர மாதிரியிருக்கிறவங்க நல்லா எழுதுறாங்களான்னு அவரே பாத்துச் சொல்லட்டும். (சதீஷ் அறையைவிட்டு வெளியேறினான்.) சட்டைக் கழுத்துப்பட்டையில பொடிக்கட்டம் போட்ட கைக்குட்டைன்னு மட்டும்தான் நீங்க எழுதுவீங்க. நாங்க எத்தன கட்டம் இருக்கு, என்ன சைய்ஸூ, என்ன கலரு, என்ன பிராண்ட்டு, அளுக்காயிருக்கா, அளுக்கில்லாமயிருக்கா, ஒத்தையா சுருட்டி சொருகியிருக்காரா, ரெண்டா சுருட்டி சொருகியிருக்காரான்னு அத்தனையும் அலசி ஆராய்ஞ்சு எழுதுவோம். தூக்குல தொங்கிறவன் டீட்டைல்ஸ எடுக்கும்போது, காலுக்கும் தரைக்கு எத்தன அடினுங் கூட எழுத மாட்டோம். எத்தன சென்டிமீட்டருனு அளந்து எழுதுவோம். கயித்துல தொங்கினானா, சேலையில தொங்கினானா, வேட்டியில தொங்கினானா, சேலைனா, யாரு சேலை, கயிறுனா, என்ன மாதிரியான கயிறு, வேட்டினா, யாரு வேட்டி, முடிச்சு எப்படியிருக்கு, தூக்குப்போட்டுக் கிட்ட ரூமு என்ன சைஸூ, எத்தன ஜன்னல், மூடியிருந்ததா, திறந்திருந்ததா, கதவு உள்ள தாப்பா போட்டிருந்ததா, வெளிய தாப்பா போட்டிருந்ததா, கதவு லாக் எவ்வளவு ஸ்ட்ராங்னு, எல்லாத்தையும் விவரணையா எல்லா கோணத்திலேயும் எழுதுவோம். உங்களவிட நல்லா எழுதுவோம். நாங்க எழுதுற ஒவ்வொரு எஃப்ஐஆரும் ஒரு கதை” என்று நீட்டி முழங்கினார் அன்பரசு. “சார் இந்தாங்க” என்று ஏ3 அளவில் இருந்த பெரிய தாள்களைக் கொண்டுவந்தான் சதீஷ். “கொடு, சதீஸ். படிச்சுப் பாக்கட்டும்”

என்று அன்பரசு சொன்னதும் சதீஷ் கதாசிரியரிடம் அந்த எஃப்ஐஆரின் நகலைத் தந்தான். கதாசிரியரும் மெல்ல அதை வாங்கிக்கொண்டார். ஆனால் வாசிக்கவில்லை. உங்களுக்கென்ன ஒரு அம்பது அம்பத்தஞ்சாகுமா? சதீஸூ, ஜோசப்பை வரச்சொல்லு. (சதீஷ் அறையைவிட்டு வெளியேறினான்). சும்மா படிச்சுப் பாருங்க! நாங்க எப்படிக் 'கதை' எழுதுரோமுன்னு நீங்களும் கொஞ்சம் தெரிஞ்சுக்குங்க" என்று பெருமை பேசிக்கொண்டிருந்த அன்பரசு, அறைக்குள் வந்த ஜோசப்பைக் காட்டி, "பாத்துக்குங்க! இவருதான் இதை ட்ராஃப்ட் பண்ணுனாரு. உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன். உங்க ஸ்டூடண்ட்தான். சர்வீஸூக்கு வந்து மூணு வருசம்தான் ஆகுது. சும்மா படிச்சுப் பாருங்க! நாங்கெல்லாம் யாருன்னு தெரியும். (ஜோசப் அறையைவிட்டு வெளியேறினான்.) ஏதோ எழுத வருதுங்கிறதுக்காக எதவேணும்னாலும் எழுதுவீங்களா?. ஒங்க கற்பனா சத்திய காமிக்கிறதுக்கு வேர்க்கடலை வண்டிக்காரனும் போலீஸ்காரனுங்களும்தான் கிடைச்சாங்களா?" என்று பொரிந்து தள்ளினார்.

"ஐயா உள்ளாறதான் இருக்காரு உள்ள போங்க" என்ற சதீஷின் குரல்கேட்டு வாசல்பக்கம் பார்த்தார் அன்பரசு. வேர்க்கடலை வண்டிப் பெரியவர் மெல்ல தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தார். பெரியவரைப் பார்த்த அன்பரசு, "உக்காருங்க! சதீஸ்ஸூ, இன்னோரு ஸ்டூல எடுத்துப்போடுப்பா. என்றார். ஒரு ஸ்டூலை எடுத்துவந்து பெரியவர் அருகில் போட்டதும் அதில் பெரியவர் பயத்துடன் அமர்ந்தார். சதீஸ்ஸூ, இது நல்லா இருக்குல! கேரக்டரும், கதாசிரியரும் ஒண்ணா! ஒரு போட்டோ எடுயா! என்று சொல்லியவாறே அன்பரசு கொஞ்சம் சத்தமாகவே சிரித்தார். கதாசிரியரை நோக்கி "சார், இந்த பெரியவரு யாருன்னு உங்களுக்குத் தெரியும்னு, நினைக்கிறேன்!... உங்க கதக் கேரக்டருதான். நல்லாயிருக்குல்ல!...." என்று நக்கலடித்துக் கொண்டே பெரியவரை நோக்கி, சரிங்கய்யா! நீங்க கிளம்புங்க. பஸ் ஸ்டாண்ட்ல ரொம்ப நேரம் இருக்கக்கூடாதுங்க! சரிங்களா! சதீஸ்ஸூ, கூப்பிட்டுப்போப்பா!" (சதீஷூம் பெரியவரும் அறையைவிட்டு வெளியேறுகிறார்கள்.) சார், நீங்களே சொல்லுங்க! கடலை விக்கிறவர கஞ்சா விக்கிறவருன்னு எழுதுறீங்க. பாவமில்லீங்களா? மஷ்ரும் ஸ்டைல் தலைமுடி இளைஞன்னு ஒரு பையன கஞ்சா வாங்கிட்டு போற மாதிரி கதையில எழுதியிருக்கிங்க.. அது கற்பனைங்களா? இல்ல, உங்க ஸ்டூடண்டுங்களா? பனியன்ல பாரதியோடு வார்த்தைகளை போட்டிருக்கிறவன ஒரு கஞ்சா மாயியா காட்டுறதுக்கு உங்களுக்கு எப்படிங்க சார் மனசு வந்தது? வாசகனுக்கு ஒரு வித்தியாசத்தை, ஒரு முரணை காட்ட இப்படியா செய்வீங்க!... தயவுசெஞ்சு இப்படியெல்லாம் பண்ணாதீங்க. இனிமேலாவது கொஞ்சம் யோசிச்சு நல்லவிதமா, யாரையும் புண்படுத்தாம எழுதுங்க. யெங் ஜெனரேஷனுக்கு ஏதாவது உதவுறமாதிரி நாலு வார்த்தை எழுதுங்க, சார். போங்க. உங்க அட்ரஸூ, ஃபோன் நம்பர ஜோசப் கிட்ட கொடுத்துத்துட்டுப் போங்க. நீங்க ஜோசப்போட டீச்சருன்னு சொன்னாங்க. அதுதான் இவ்வளவு மரியாதை. இல்லாட்டி எங்க ட்ரீட்மெண்ட்டே வேற! புரிஞ்சிருக்கும்ணு நினைக்கிறேன். கிளம்புங்க" என்று நீண்ட உரையாற்றி முடித்தார் அன்பரசு.

கதாசிரியர் எழுந்து கைகளைக் கூப்பி அன்பரசிற்கு வணக்கம் சொல்லி அறையைவிட்டு வெளியே வந்தார். வெளியறையில் ஜோசப்பிடம் தனது விலாசத்தையும் கைபேசி எண்ணையும்

கொடுத்தார். ஜோசப்பும் சதீஷும் கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க, கவலை தோய்ந்த முகத்தோடு காவல்நியைத்தை விட்டு வெளியேறினார் கதாசிரியர். "சதீஸூ! சதீஸூ!" என்று உள்ளறையிலிருந்து அன்பரசு அழைத்தார். சதீஷ் உள்ளே சென்றான். "ஏம்பா! கதாசிரியர் ஏதாவது பேசினாரா? மனுசன் வாயத்தொறக்கலே! ஏதோ, கிறுக்குப்பய மாதிரில இருக்கான். ஏன்! சதீஸூ இந்த கத எழுதுறவிங்க எல்லா இப்படித்தான் இருப்பானுங்களா? இல்ல, கிறுக்குப் பயலுக மட்டும்தான் கத எழுதுவானுங்களா? ஒண்ணும் புரியல போ!... ஆமா!... ஏதோ ஒரு பொம்ள அங்க ஒக்காந்திருந்ததா சொன்னியே! அதுட்ட ஏதாவது டீட்டைல்ஸ் எடுத்துயா?" என்றார். "இல்லீங்க, சார். டீட்டைல்ஸ் எதுவும் எடுக்கலீங்க, சார். அது ஒரு கிறுக்குப்பொம்பளங்க" என்றான் சதீஷ். "இன்னைக்கு ஏதும் ஒரு எட்டு போய் பாத்துட்டு வர்றியா? உனக்கு எதாவது வேலைனா, ஜோசப்பக் கூட போய்ட்டுவரச் சொல்லு" என்றார் அன்பரசு. அந்த வார்த்தைகளில் நிறைந்திருந்த அவருடைய சந்தேகத்தைச் சட்டென்று புரிந்துகொண்ட சதீஷ் "எனக்கு ஒண்ணும் வேலை இல்லீங்க. ஈவ்னிங் ஃப்ரிதான் சார். நா போயிட்டு வர்றேனுங்க!" என்றான்.

இரவு ஒன்பது மணி. பேருந்து நிலையம். நீண்ட நிழற்குடை. வேர்க்கடலை வண்டி. பெரியவர். இரண்டு வகைப் பொட்டலங்கள். பேருந்துகள். பயணிகள். "எந்த பஸ்ஸூ எங்க போனா எனக்கென்ன" பெண். உரத்த குரல். "வேர்க்கடல! வேர்க்கடல!.... வறுத்த வேர்க்கடலை". சட்டியில் கரண்டியின் சத்தம். நிழற்குடையின் உள்ளே நீள இருக்கைகள். அங்கே மல்லாந்து கிடந்தான் மஷ்ரூம் ஸ்டைல் தலைமுடி இளைஞன். அதே பனியன். "நான் /வீழ்வே / னென்று / நினைத் / தாயோ".

vasuaruntamil@gmail.com ■